# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2058/33 - 2018 පෙබරවාරි මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.02.15

*2058/33 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் 2017.11.09 ஆந் திகதிய 2044/32 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் மேற்குறித்த கட்டளையின் II ஆம் அட்டவணையின் விடய இலக்கம் 1 (அ) பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளையினை, இதனகத்துப் பின்னர் உள்ளவாறான பின்வரும் அட்டவணையினை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.*

*இக்கட்டளையானது 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறுதல் வேண்டும்.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2018, பெப்புருவரி 15.*

**அட்டவணை**

| | *விவரம்* | *உற்பத்தித் தீர்வை* |
|---|---|---|
| *(அ)* | *பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 22/99 மற்றும் அதற்குப் பிற்பட்ட திருத்தங்கள் என்பவற்றிற்கமைய, மேற்குறித்த சுற்றறிக்கையில் விதித்துரைக்கப்பட்டவாறு, அரச உத்தியோகத்தர் ஒருவரினால் அவர் வகித்த பதவியினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் குழுக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டு விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திர மொன்றினை பயன்படுத்தி அரச உத்தியோகத்தர் ஒருவரினால்,* | |
| | *குழு I* | *கொடுப்பனவு செய்யப்படவுள்ள தீர்வையில் இருந்து ரூபா 22.0 மில்லியனைக் கழித்ததன் பின்னரான தீர்வை (அதாவது, கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தீர்வை - ரூபா 22.0 மில்லியன்)* |



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | *விவரம்* | *உற்பத்தித் தீர்வை* |
|---|---|---|
| | குழு II | கொடுப்பனவு செய்யப்படவுள்ள தீர்வையில் இருந்து ரூபா 16.0 மில்லியனைக் கழித்ததன் பின்னரான தீர்வை (அதாவது, கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தீர்வை - ரூபா 16.0 மில்லியன்) |
| | குழு III | கொடுப்பனவு செய்யப்படவுள்ள தீர்வையில் இருந்து ரூபா 12.0 மில்லியனைக் கழித்ததன் பின்னரான தீர்வை (அதாவது, கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தீர்வை - ரூபா 12.0 மில்லியன்) |

*03- 218*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.